**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.74/2025
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : கமலா | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : முருகேசன் | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

26.02.2026

(எதிரி ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் செல்லூரில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் அசா.1 எனது மகள், ஆஜர் எதிரி எனது மருமகன் ஆவார்கள். அவர்களிடையே எந்த பிரச்சனையும் இல்லை. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் வழக்கு சம்பவத்தை பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்).

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பவம் நடந்தபோது நான் சம்பவ இடத்தில் இருந்ததாகவும் சம்பவத்தை நேரில் பார்த்து சண்டையை விலக்கியதாகவும், எதிரி அசா.1 யை ஆபாசமாக பேசி கம்பியால் தாக்கி அவருக்கு காயம் ஏற்படுத்தியதையும், அவரை கொலைமிரட்டல் விடுத்ததையும் பார்த்ததாக போலிசார் விசாரித்தபோது கூறிவிட்டு தற்போது எதிரி மருமகன் என்பதால் அரசு தரப்பிற்கு எதிராக பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.74/2025
Prosecution witness.03

| | |
|---|---|
| பெயர் : ராஜாங்கம் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : கருப்பன் | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

26.02.2026

(எதிரி ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் செல்லூரில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் அசா.1 எனது மகள், ஆஜர் எதிரி எனது மருமகன் ஆவார்கள். அவர்களிடையே எந்த பிரச்சனையும் இல்லை. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் வழக்கு சம்பவத்தை பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்).

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பவம் நடந்தபோது நான் சம்பவ இடத்தில் இருந்ததாகவும் சம்பவத்தை நேரில் பார்த்து சண்டையை விலக்கியதாகவும், எதிரி அசா.1 யை ஆபாசமாக பேசி கம்பியால் தாக்கி அவருக்கு காயம் ஏற்படுத்தியதையும், அவரை கொலைமிரட்டல் விடுத்ததையும் பார்த்ததாக போலிசார் விசாரித்தபோது கூறிவிட்டு

தற்போது எதிரி மருமகன் என்பதால் அரசு தரப்பிற்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR</u>**

CC.No.74/2025
Prosecution witness.04

| | |
|---|---|
| பெயர் : கோட்டைச்சாமி | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : ஆறுமுகம் | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

<u>26.02.2026</u>

(எதிரி ஆஜர்).

**<u>முதல் விசாரணை :</u>**

**1)** நான் தற்போது கீழத்தூவல் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்து புலன்விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்த சார்பு ஆய்வாளர் திரு.முருகன் அவர்கள் பணிஓய்வு பெற்றுவிட்டார். அவர் என்னுடன் பணிபுரிந்த காரணத்தினால் அவரது கையொப்பம் நன்கு தெரியும் என்பதன் அடிப்படையிலும், ஆவணங்கள் அடிப்படையிலும் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 04.04.2025 ம் தேதி காலை 07.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் திரு.முருகன் காவல் நிலையப் பொறுப்பில் இருந்தபோது பரமக்குடி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த பூர்ணவள்ளி என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று காலை 09.00 மணிக்கு நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கு ஏற்ப நிலையக் குற்ற எண்.44/2025 பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) BNS கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**2)** அவர் வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் குமார் மற்றும் ரமேஷ் ஆகியோர்

முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். **பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்திலிருந்து எதிரி குற்றச்சம்பவத்தில் பயன்படுத்திய சுமார் 66.5 செ.மீ. அளவுள்ள இரும்பு கம்பி ஒன்றை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். **அந்த கைப்பற்றுதல் மகசர் அசா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3)** அன்றைய தினமே சம்பவயிட சாட்சிகளான சாட்சிப்பட்டியலில் உள்ள 1 முதல் 5 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கு சம்பவம் உண்மை என தெரிய வந்ததாலும் எதிரி குற்ற சம்பவத்தில் ஈடுபட்டது உண்மை என தெரியவந்ததாலும் எதிரியை தேடிவந்த நிலையில் அன்றைய தினமே 16.00 மணிக்கு செல்லூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைபள்ளி அருகே நின்று கொண்டிருந்த ஆஜர் எதிரியை ரகசிய தகவலாளி அடையாளம் காட்ட அவரை கைதுக்கான காரணம் கூறி நிலையம் அழைத்து வந்து முறைப்படி திரேக பரிசோதனை செய்து பாராகாவல் வசம் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். வழக்கு சொத்தை படிவம்–91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து PR No.52/2025 பெற்றுள்ளார். **படிவம்–91 அசா.ஆ.7 ஆகவும், 66.5 செ.மீ. அளவுள்ள இரும்பு கம்பி ஒன்று அசா.பொ.1 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**4)** இவ்வழக்கில் காயம்பட்ட அசா.1 க்கு சிகிச்சை அளித்த பரமக்குடி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.ஜெகநாதன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி மருத்துவர் அவர்கள் வாதிக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கியதையும் பெற்றுள்ளார். **அசா.1 க்கு பரமக்குடி அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு அசா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**5)** அத்துடன் வழக்கின் புலன் விசாரணையை கடந்த 16.04.2025 ம் தேதி முடித்து எதிரி மீது பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) BNS கீழ் இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

வாதி கொடுத்த பொய் புகாரை முறையாக விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.